# மாவைக் கந்த தரிசனம்



அளவையூர்
Dr.பொன்.குகன் தாசன் அவர்கள் இயற்றிய
பக்திப் பாமாலை

உ
ஓம் சரவணபவாயநம:





யாழ் அளவையூர் வாசியும்

பிரித்தானியாவில் வதிவிடமாகவும் கொண்டிருக்கும்

## Dr.பொன்.குகன் தாசன்

அவர்களால் அன்பு கனிந்து ஆக்கிய

# மாவைக்கந்த தரிசனம்

19.10.2018

உ
குமயம்

பிரித்தானியாவில் வசிக்கும்
அளவையூர்
Dr.பொன்.குகன் தாசன் அவர்களால்
அன்புகனிந்து ஆக்கிய

# மாவைக் கந்த தரிசனம்

காப்பு

பிரம்மாதி தேவரும் போற்று வேல்சுப்
பிரமணிய ஆதிப் பிரம்ம மோதிய -அழகா
கரமது பன்னிரண்டுங் கொண்டே மாவைப்பதி
மருவிய கந்தாவென் துயர் தீர்க்கும் பாவே!

வாருமைய்யா மாவைக்கந்தா புதுமனையில்
வள்ளிதெய் வானையும் வாழ்ந்திருக்க
கேளுமையா உம் பக்தர்கள் கூக்குரல் தனை
சேயிளந் தாயும் கைம்பெண்கள் பலவிலும்
புலம்பியழும் சோகக் குரல் கேட்கவில்லையா
உமது பன்னிரு காதுகளில் விழவில்லையா
ஆறுமுக வேலவா நீ நினைத்தால் ஆகாதது ஒன்றுண்டோ
நாம் வேண்டி நிற்பதெல்லாம்
உன் கடைக்கண் பார்வை மட்டும்-அது
எம்மைச் சூழ்ந்த கருவிருள் போக்கி
ஒளிமயமாக்குமையா!
நாம்படும்துயர் எல்லாம் நொடிபொழுதினிலே பறந்திடுமே
காணாமல் போனோர் கண்முன்முன்னே வந்து நிற்பர்
நாம் இழந்த அத்தனையும் எம்மிடமே திரும்பிவரும்
நீ நினைத்தால் இவையெல்லாம் நிறைவேறும்
உன் புன்சிரிப்பொன்றே போதுமையா!
எம்பிணி அனைத்தும் பறந்திடவே
மாவையம்பதியில் உறை மால் மருகா
பொறுத்திருந்தோம் உம்மருளைப் பெற்றிடவே
அள்ளித் தாருமையா
தந்தைக்கு உபதேசித்த குருநாதா-அறியாது
பிழைசெய்தோர் மனித்தினுள் புகுந்து
அவர்தம் அறியாமையெனும் இருளகற்றி
நெறிப்பட வையுமையா
மாவையம் பதியுறை மால் மருகா

மாவையம் பதியுறை மால் மருகா
ஏன் ஐயா எம்மையெல்லாம் மறந்திட்டாயா
காஞ்சியிலே கச்சியப்பருக்கு மாவடியில்
ஏடெடுத்துக் கந்தபுராணம் மலர வைத்தாய்-இன்று
சீமையிலே வந்தென்னை யுன்புகழ் பாட வைத்தாய்
ஏனைய்யா இத்திரு விளையாட்டு
நாம் என்ன தீங்கிழைத்தோம் இவ்வினை யனுபவிக்க
அன்று மாறுபடு சூரனை வேலால் வதைத்திட்டு
தேவரைக் காத்தாய் ஐயா
வயித்தீசர் மைந்தா நீயெந்தன் மாறாக் கொடுநோய் தனை
மருத்துவத்தை வியக்கவைத்து மாற்றிட்டாய்
மால்மருகா மாவைக் கந்தா!
ஏனைய்யா எம்மலரை அழியவிட்டாய் என் முருகா
வனக்குற வள்ளியவள் மோகமதுன் மனதை
மயக்கியதோ அன்றி-முருகா
பழமுதிர் சோலையின் குளிர்மையிலுனை மறந்தனையோ
என்குமரா அன்றி மாம்பழ மிழந்திட்ட
சீற்றமின்னும் தணிய வில்லையோ
அதனால் பழநியில் அமர்ந்திட நினைத்தனையோ
செய்தபிழை பொறுத்தருளமாட்டாயா மாவைக் கந்தா
பாங்குடனே வாழுமையா எம் துயர் போக்கிடவே
சீரும் சிறப்பு மெல்லாம் உலகெலாம் வாழும் எம்மவர்க்கு
வந்தடைய அருளுமெம் சேவற் கொடியோனே!
அலைபாயும் திருச்செந்தூர் சென்றங்கு சினந்தணிந்தாய்
போதுமைய்யா வந்திங்கு
எம்மையெல்லாம் இரட்சித்துக் காத்திட வாருமையா
மாவையம் பதியுறை மால் மருகா

விரைந்தோடி வாருமைய்யா வேலவனே
கரங்கொடுத்து எமையெல்லாம் காத்திடவே
விரைந்தோடி வாருமையா வேலவனே
போதுமையா உம் மௌனம் - முருகா
மாருத வல்லிக்குத் துயர் தீர்க்க
குடியமர்ந்தாய் மாவையிலே-கந்தா நீ
ஏன் ஐயா இன்றெம் துயிரினை தீர்க்வில்லை
நாம் என்ன பழியிழைத்தோம்
உன் பாரா முகத்திற்கு
பொறுத்தருளும் எமதுபிழை எல்லாம் குமரா
விரைந்தருள வாருமையா வடிவேலால்
எம்மினங் காத்திடவே
சிறப்புடனே நாம்வாழ வழி வகுத்திடுவாய் ஐயனே!
ஆறுமுகா ஆறுபடையேறிவர
இயலவில்லை எம்மவரால்
கதிரமலை வந்து துதிக்க கூறுகள் பலவுள
இருப்பதெல்லாம் நீ ஐயா
பாராமுகம் போதுமைய்யா வேலாயுதா
ஏறுமயில் ஏறிவந்து காருமையா
எமையெல்லாம் வேல்முருகா
மாவைப் பதியுறைய்யு மால்மருகா
மாவைக் கந்தா

ஆறுபடை வீடமர்ந்து அரள்புரிந்து மனம் ஆறி
மாவையம்பதியில் வந்தமர்ந்து
மாருதப்புரவல்லியவள் மாமுகத்தை நீக்கிவிட்ட
எம் மாவிட்ட புரத்தானே!
உன் ஏழாம் படை வீடாய்
எம்மிதயமதில் நீயமர்ந்து
எமையெல்லாங் காத்தருள்வாய் எம் கோவே!
அன்று போதர் முனியின் கூற்றினை மெய்யாக்கி
மாறாதென் வினையை மாற்றிவைத்த என் கோவே!
உன்தாசன் என்தனை உன் நுழைவாயில்
சீராக்க வைத்திட்டு என் கோவே!
நானறிவேன் உன் அருளை மறைந்திருந்தருள்
புரிந்த மாயமென்ன மாயோன் மருகா எம்மன்னா!
வாருமையா எம்மடியார் பிணிநீக்கி உயிர்காக்க
வாருமையா வயித்தீசன் மைந்தனே!
நாமெல்லாம் பாங்காக வாழ்ந்திடவே
எம்மக்கள் துயரினைப்
போக்கி சீருடன் வாழ்ந்திடவே
உம் பாதம் பற்றி நிற்போமையா
உன்னம்மை உனக்களித்த
வேல்கொண்டு எமையெல்லாம்
நோய்தீர்த்து அறிவூட்டி
வினைகாத்து ரட்சிப்பாயே!
மாவையம் பதியுறை மால் மருகா.

குன்று தோறாடுகின்ற குமரா வடிவேலா!
மாவையம் பதியுறை மால் மருகா!
மாறுபடு சூரனை வதம் கொண்டு
தேவர்தனை ரட்சித்து மனமாறி
திருச் செந்தூரில் வந்தமர்ந்தாய்!
நீதியது தவறும் போது உன்
சீற்றம் கண்டே ஆண்டியாய் பழநிதனில் அமர்ந்திருந்தாய்
ஓம் எனும் தத்துவத்தை தந்தைக்கு உபதேசித்து
ஈசனுக்கு ஆசானாய் சுவாமிமலையில் அமர்ந்த எம் முருகா!
பழமுதிர் சோலை தனில் வள்ளியவள் பக்திக்கு
உனையிழந்தே லீலைகள் பல புரிந்தாய்
பரங்குன்றில் தெய்வானை யம்மைதனை மணம் பரிந்து
மணவாளக் கோலம் கொண்டு மால் மருகனானாய்
மாறுபடு சூரனை வதஞ்செய்தே சீற்றமது தணிந்திடவே
ஆறுபடை வீடமர்ந்து அருள் புரிந்தாய் தணிகையிலே
மனந்தெளிந்தே பக்குவ நிலையடைந்து
வந்தமர்ந்தாய் எம் மாவையம் பதிதனிலே!
ஏனையா இனித் தாமதம் உம்மருளை
வாரி அருளுமையா உன்னருளை எமக்கெல்லாம்
உமது மாசறாக் கருணைதனைப் பொழியுமையா
அவ்வையின் பக்திதனை பாரினில் உணர்த்திடவே
சுட்டபழம் கொடுத்தறிவு பெற்ற குமரா!
உன்கடைக்கண் பார்வையொன்றே போதுமென
நம்குறைதன்னை போக்கி துன்பமெல்லாம் தீர்த்திடவே
மாவைப் பதியுறை மால்மருகா காத்திடுவாய்.

மால் மருகா மாவையுறை வேல் முருகா
எங்கிருந்தாய் எம்மைய்யா குமரா
தாய் மண்ணில் பலலட்சம் பரிதாப
இழப்பையெல்லாம் எண்ணாது கண்ணுற்றாய்
மால் மருகா மாவை வேல் முருகா
எம்மையெல்லாம் சோதித்தது போதுமையா
மயிலேறி வாருமையா எமையெல்லாங் காத்திடவே
போக்குமையா எம்மினத்தின் தாளாத துயர்தன்னை
அன்றொருநாள் தேவர்தம் துயர் துடைத்தாய்
சூரபத்மன் வதஞ் செய்தாய்-இன்று
ஏனைய்யா எமை மறந்தாய்
போதுமைய்யாவுன் பொறுமை
பாருமையா படுதுயருள் எம்கதியை
நீதியை நிலைநாட்டி நம்மரபைக் காருமைய்யா
மாவை பதியுறை வேல்முருகா நாமறிவோம்
நீ நினைத்தால் ஆகாதது ஒன்றுமில்லை
மால் மருகா மாவை வேல் முருகா!
மயிலேறி வந்தெமது இன்னலை போக்கிடுவாய்
சீராக்கி வையுமைய்யா எம் வாழ்வினை
புதிதான உலகமென அமைதிகிட்டப் பதிதனிலே
பாங்காக வதியும் மாவைக் கந்தா
நீ நினைத்தால் ஆகாதது ஒன்றுமில்லை
எம்துயர் நீக்கி அருள் அளிப்பாய்
மாவைப் பதியுறையும் மால் மருகா!!

அன்று காஞ்சிமாவடியில் ஏடெடுத்துக்
கொடுத்திட்டாய் கச்சியப்பருக்கு
உன்புகழ் கந்தபுராணம் பாடிடவே
பாமரன் எனக்கின்று உன்புகழ் பாடப்
பணித்திட்டாய் பராபரனே!
தவறொன்றும் செய்யாது மறைந்திட்ட
மாந்தர்தம் ஆவிகளை ரட்சிப்பாய்
மாவைப் பதியுறை வேல்முருகா
அவர்தம் அழிவிற்கு தவித்திட்டோ
உளம்புகுந்து நீதியினை உணர்த்துமைய்யா எம்வேலா
காணாமல் போனோம் பலர்கதி என்னைய்யா
அவர்படும் துயர் துடைக்க மயிலேறி வாருமைய்யா
உன் அன்னை அவள் அன்றளித்த அறிவு
வேல் கொண்டு எம்மையெல்லாம்
காத்திடவே வாருமையா
நீதி பெற்றுத் தாருமையா மாவைக் கந்தா
பாங்காக மாவையிலே கோவிலமைத்து
பணிந்து நிற்கின்றோம் மால் மருகா
எம்மினம் இன்னமும் வாடாது காருமைய்யா
வேலவனே எமைக்காக்க
குறவள்ளி தெவ்வானை உடனிருக்க
பச்சைமயிலேறி வாருமைய்யா
மாவைக் பதியுறையு மால் மருகா.



**மாவைக் கந்தனின் ஆறாத பக்தியினால்**
**அன்புகனிந்து ஆக்கியது**



நெடியாளிகை
அளவையூர்
கவிக்குமரன்-கலைஞானமணி
தி.லம்போதரன்